பொதுசன நூலகம்
உடனுதவும்
1991

# தமிழர் தாயகத்தை அரசு அங்கீகரிக்க வேண்டும்

## 'பிரபா' பேட்டி

(லண்டன்)

"இலங்கை அரசு உண்மையில் அமைதியை விரும்புவதாயின் முதலில் தமிழர் தாயகத்தை அங்கீகரிக்கவேண்டும் என அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்த பி. பி சி. நிருபர் கிறிஸ்மொறிஸ்க்கு அளித்த பேட்டியில் விடுதலைப் புலிகள் தலைவர் திரு. வேலுப்பிள்ளை பிரபாகரன் கூறினார்.

நேற்றுக்காலை இந்த பேட்டி பி. பி. சி. ஆங்கில ஒலிபரப்பின் செய்தி விமர்சனத்தில் வெளியானது. அதன் விபரம் வருமாறு:-

நாங்களும் பேச்சுவார்த்தையை விரும்புகிறோம். ஆனால் தமிழரின் சுயநிர்ணய உரி

(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 33 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆவணி 20 இதழ்: 206
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 5-9-1991

## சடலத்தில் குண்டு:

### 2 அதிரடிப்படையினர் பலி

(மட்டக்களப்பு)

அக்கரைப்பற்றில் புலிகளின் புதுவிதமான உத்தியைக் கொண்ட தாக்குதல் ஒன்றில் 2 கமாண்டோ படையினர் கொல்லப்பட்டனராம்.

இப்பகுதியில் இனந்தெரியாத சடலமொன்று கிடப்பதாக படையினருக்கு தொலைபேசி தகவல் ஒன்று வந்ததாம். இதையடுத்து அங்கு

(4-ம் பக்கம் பார்க்க)

★ நான்காவது நாளாக

# மணலாறில் உக்கிர மோதல்

# 12 இராணுவம் பலி; 40 படையினர் படுகாயம்!

### - வடக்கு - கிழக்கை பிரிக்க முயற்சி? -

(கொழும்பு)

மணலாறு மாவட்டம் நித்திகைக்குளம் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதலில் 12 படையினர் கொல்லப்பட்டதுடன், 40 படையினர் படுகாயம் அடைந்ததாக அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்தும் நான்காவது நாளாக நேற்றும் இப்பகுதியில் உக்கிரமான மோதல் இடம்பெற்றது.

மணலாறு மாவட்டத்தில் காடுகளினுள் நுழைய, படையினர் முயன்றுவருகிறார்கள். இதனைத் தடுத்து, புலிகள் எதிர்த் தாக்குதல் நடத்திவருகிறார்கள். படையினருக்கு உதவியாக பல குண்டுவீச்சு விமானங்களும், கடலிலிருந்து

(4ம் பக்கம் பார்க்க)

## யாழ். நகரில் திருட்டு

### அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் தற்போது இரவு நேரங்களில் அடிக்கடி திருட்டுச் சம்பவங்கள் நடைபெற்று வருவதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது.

வர்த்தக நிலையங்கள், புடவைக் கடைகள், அச்சுக்கூடங்கள் உட்பட யாழ். மலநோக்குக் கூட்டுறவுச் சங்கக்கிளைகளிலும் திருட்டு இடம்பெற்று வருகிறது.

தட்டாதெரு, ஈச்ச மோட்டை, கந்தர்மடம், அரியாலை கலைமகள் வீதி, கைலாச பிள்ளையார் கோவிலடி, சின்

(4-ம் பக்கம் பார்க்க)

## இராணுவத்துக்கு அரசு புதிய உத்தரவு

(கொழும்பு)

வடக்கு-கிழக்குப் பகுதியில் தற்போது நடைபெற்றுவரும் யுத்த நடவடிக்கை குறித்து தகவல் எதனையும் வெளியிட வேண்டாமென படையினருக்கு அரசு உத்தரவிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை மணலாற்றுப் பகுதியில் நடைபெறும் யுத்

(4ம் பக்கம் பார்க்க)

## பிரேமாவை பதவிநீக்கக்கோரி கூட்டங்கள் நடாத்த ஏற்பாடு

(கொழும்பு)

ஜனாதிபதி பிரேமாவை பதவி நீக்கக் கோரும் மனுவுக்கு ஆதரவு கோரி பொதுக் கூட்டங்கள் நடாத்த ஐ.தே.க. அதிருப்தியாளர்களும் எதிர்க்கட்சிகளும் முடிவு செய்துள்ளதாக திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: எதிர்க்கட்சிகளின் கருத்துக்களை தகவல் தொடர்புசாதனங்கள் முழுமையாக வெளியிடாததாலேயே மேற்படி

(4-ம் பக்கம் பார்க்க)

## இராணுவம் புலிகள் ஆனையிறவில் மோதல்

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவு இராணுவத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்றுமுன்தினம் கடும்மோதல் ஏற்பட்டது.

மேற்படி முகாமிலிருந்து இராணுவத்தினர் வெளியே வந்து பதுங்குகுழிகளை அமை

(4ம் பக்கம் பார்க்க)

## பொது இணக்கத்தை ஏற்படுத்த தமிழ் - முஸ்லிம் கட்சிகள் முயற்சி

(கொழும்பு)

இனப்பிரச்சினைதீர்வு தொடர்பாக அதிகார பரவலாக்கல் குறித்து தமிழ், முஸ்லிம் குழுக்கள் இடையே பொது இணக்கத்தை ஏற்படுத்தும் முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாக

[4-ம் பக்கம் பார்க்க]

## காமினி, லலித்தின் சதி படுதோல்வி

(கொழும்பு)

காமினி, லலித் ஆகியோரின் சதிமுயற்சி படுதோல்வி அடைந்துள்ளதாகவும் நாட்டில் எழுந்த அரசியல் நெருக்கடி தற்போது தீர்ந்து விட்டதாகவும் அமைச்சர் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

தற்போது அரசாங்க கட்சியில் உள்ளவர்களின் எண்ணிக்கையை கணக்கிட்டு பார்க்கும்போது அண்மையில் எழுந்த அரசியல் நெருக்கடி தீர்ந்துவிட்டது.

(4-ம் பக்கம் பார்க்க)

## சமரசம் செய்ய தீவிர முயற்சி

(கொழும்பு)

ஜனாதிபதி பிரேமதாசா கோஷ்டியினருக்கும் ஐ. தே. கட்சியில் உள்ள அதிருப்தியாளர்களுக்கு மிடையில் சமரசம் ஏற்படுத்தும் தீவிர முயற்சி ஒன்று மேற்கொள்

(4ம் பக்கம் பார்க்க

## மணலாறுபகுதியில் அகோர விமான தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

மணலாறு மாவட்டத்திலுள்ள நாயாறு, செம்மலை, அளம்பில் போன்ற பகுதிகளில் நேற்று பல குண்டு வீச்சு விமானங்கள் அகோரத்தாக்குதல்களை குடிமனைகளை நோக்கி

(4-ம் பக்கம் பார்க்க)

## சர்வஜன வாக்கெடுப்பிற்கு எதிர்க் கட்சிகள் தயார்!

(கொழும்பு)

''ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸா சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடத்த முன்வருவாரேயானால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உட்பட சகல எதிர்க்கட்சிகளும் அதை எதிர்கொள்ளத்தயாராகவே உள்ளன''.

நேற்றுக்காலை கொழும்பில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் ஸ்ரீ. ல. சு. கட்சி தலைவியும் எதிர்க்கட்சித் தலைவருமான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா

(4ம் பக்கம் பார்க்க)

## புலிகளின் நடவடிக்கைக்கு தடை விதிக்க கோரிக்கை

(சென்னை)

இந்தியாவில் விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகளுக்குத் தடைவிதிக்கும்வகையில் மத்திய அரசு நடவடிக்கை மேற்கொள்ளவேண்டுமென திரு. வாழ்ப்பாடி ராமமூர்த்தி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; ராஜீவ் காந்தி கொலையில் விடுதலைப் புலிகளுக்கு

(4ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

### வாங்க / விற்கப்படும்

பழையபுத்தகங்கள், கொப்பிகள், சஞ்சிகை, போத்தல் வகைகள், உர, கோழித்தீன், சீமெந்து உறைகள், வெற்றுத் தகரங்கள் வாங்கப்படும். விற்கப்படும். சோ. சேனாதிராசா, முகாமையாளர், இராமநாதன் பழைய புத்தகசாலை, 108, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (சி-5168)

### அதிஷ்டம் அழைக்கிறது

கடன் தொல்லை, எத்தொழில் செய்யினும் நட்டமடைதல், தொழில் முயற்சிகள் தடை, பருவத்தில் விவாகம் நடைபெறாமை, கல்விக் குழப்பம் போன்ற சகல துன்பங்களும், கவலைகளும் நீங்க சாதகத்துடன் நேரில் வரவும். ஸ்ரீலஸ்ரீ குருக்கள், ஸ்ரீ மாவை விநாயகர் சோதிட நிலையம், [அரசடிச் சந்தி] 146, பருத்தித்துறை ரோட், நல்லூர், யாழ்ப்பாணம். [(சி-5260)]

### கண்டெடுக்கப்பட்டுள்ளது

திருகோணமலை ஜோர்ச் வீதியைச் சேர்ந்த செல்வி கோமேஸ்வரி செல்லத்துரை (718190010V) என்பவருடைய அடையாள அட்டை சிறிய பேர்சுடன் பருத்தித்துறை பத்திரகாளி வீதியில் கண்டெடுக்கப்பட்டுள்ளது உரிய வர்சவ் என். லோகன் பத்திரகாளி வீதி, பருத்தித்துறையில் பெற்றுக்கொள்ளலாம். [சி-1556]

### அரசாங்க எழுதுனர் சேவை

போட்டிப் பரீட்சைக்கான சனி, ஞாயிறு பயிற்சி வகுப்புகள் ஆரம்பம், 8-9-91 1-30 மணி. விண்ணப்பப்பத்திரத்தையும், விபரத் திரட்டையும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். முழுக் கட்டணம் 275/- School of Business Administration, 16, 3rd Cross Street, Jaffna. (சி-5269)

## திருமணம்

காலஞ்சென்ற சட்டத்தரணி திரு. தா. சங்கரப்பிள்ளை யாழ். நகர் விவாக பதிவாளர் திருமதி சிவானந்தவள்ளி அம்மாள் தம்பதிகளின் புதல்வன்

திரு. S. ஜெயகுமார் [தொழில் நுட்ப அதிகாரி]

செல்வி இந்திராணி ஏகாம்பரமூர்த்தி

அவர்களை அமெரிக்கா நியூயோர்க் நகரில் பதிவுத் திருமணம் செய்துகொண்டார் என்பதை உற்றார் உறவினர் நண்பர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறேன்.

திருமதி சிவானந்தவள்ளி அம்மாள்
சங்கரப்பிள்ளை

210, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

[சி-5262]

## தமிழ் நூல்கள் தேவை

சுன்னாகத்திலுள்ள கிறிஸ்தவ இறையியல் கல்லூரி மாணவரின் பாவிப்பிற்காக தமிழ் இலக்கிய நூல்கள் தேவைப்படுகின்றன. நல்ல நிலையிலுள்ள நூல்கள் விலைகொடுத்து வாங்கப்படும். இவற்றை வைத்திருப்போர் தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:-

**கல்லூரி முதல்வர்,**
**கிறிஸ்தவ இறையியல் கல்லூரி**
சுன்னாகம்.

(சி-5255)

## யாழ்/வைத்தீஸ்வர வித்தியாலய
## பவள விழா

முதலாம் அங்கம்

## ப ண் ணி சை விழா

இடம்: வித்தியாலய விவேகானந்தர் அரங்கு
06-09-91 வெள்ளிக்கிழமை
காலை 8-00 மணி தொடக்கம்

பிரதம விருந்தினர்: திரு. சு. கணபதிப்பிள்ளை
கல்வி அதிகாரி (சங்கீதம்)

சிறப்பு விருந்தினர்; திரு. து. சீனிவாசகம், B. A.
திருவாட்டி சீனிவாசகம்

பண்ணிசைக் கருத்தரங்கு:
திரு. நா. மு. வி. நவரத்தினம்
விரிவுரையாளர் இராமநாதன் நுண்கலைக் கழகம்

பண்ணிசை: வைத்தீஸ்வர மாணவிகள்
இராமநாதன் நுண்கலைக்கழக மாணவிகள்

பவள விழாக் காண்க! பல்லாண்டு வாழ்த்துக!

பவள விழாச் சபையினர்.

யா/வைத்தீஸ்வர வித்தியாலயம்,
யாழ்ப்பாணம்.

மு. கு. இரண்டாம் மூன்றாம் அங்கங்கள் 14, 15-ம் திகதிகளில் நடைபெறும்.

(சி 1432)

## தட்டுப்பாடு
(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் மலேரியா மருந்து உட்பட ஏனைய மருந்துகளுக்கும் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது (83)

## நாய்கள் அழிப்பு
[பண்டத்தரிப்பு]

பண்டத்தரிப்புச் சந்தைப் பகுதியில் கட்டாக்காலி நாய்களை அழிப்பதற்கு பண்டத்தரிப்பு பொது சுகாதாரப் பகுதியினர் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர். (72)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
### விவசாயபீடம்
கிளிநொச்சி

பின்வரும் பதவிகளுக்கு 1991-09-27 ஆம் திகதி வரை பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளப்படும்.

1. தற்காலிக ஆங்கிலப் போதனாசிரியர்
2. தற்காலிக உதவி விரிவுரையாளர் / தற்காலிக செய்முறைகாட்டுநர் பயிராக்கவியல்/விவசாய இரசாயனவியல் / விவசாயப் பொருளியல்/ விவசாய உயிரியல்/ மிருக விஞ்ஞானம்/ விவசாயப் பொறியியல்.
3. தற்காலிக உதவி விரிவுரையாளர் கணிதம்.

சம்பள அளவுத்திட்டம்

1. தற்காலிக ஆங்கிலப் போதனாசிரியர்: 3,000/- ரூபா [நிலையானது] மாதமொன்றுக்கு.
2. தற்காலிக உதவி விரிவுரையாளர்: 3,900/- ரூபா [நிலையானது] மாதமொன்றுக்கு.
3. தற்காலிக செய்முறை காட்டுநர்: 3,250/- ரூபா [நிலையானது] மாதமொன்றுக்கு.

விண்ணப்பங்கள் இப்பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட உதவிப்பதிவாளர் [தாபனங்கள்] அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக்கூடிய படிவங்களில் செய்யப்படுதல் வேண்டும்.

விண்ணப்படிவங்களுக்கான வேண்டுகோளுடன் 23 X 10 ச. மீட்டர் அளவுடைய சுயமுகவரியிட்டு முத்திரை யொட்டப்பட்ட கடித உறை அனுப்பப்படல் வேண்டும்.

அரசாங்கத்திணைக்களங்கள், அரச கூட்டுத் தாபனங்கள், நியதிச்சட்ட சபைகளில் உள்ள விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

**- பதிவாளர்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1991-09-01.

(எ 1553)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

★  ★

### வீரவேங்கை பெனு
[கிளிற்றன் நிர்மலன்]


மன்னார் மண்ணில். 25-04-1973 — யாழ். கோட்டையில்: 03-09-1990

பெனு!
நீ
கோட்டையில்
கொடி பறக்கவிட
கொடியவர் தன்னுடன்
போர் தொடுத்தாய்
அதனுள் மாண்டு போனாய்
உன் ஆசை
நிறைவேறி
கோட்டையில் இப்போ
புலிக்கொடி............
நிர்மலா!
உன்னை
நீல மேகமெல்லாம்
நின்று பார்த்து
அழுகின்றன
உன் உடலைக் கண்டு
ஆண்டு ஒன்றுதான்
ஆனால்!
உன் உயிர் நினைவு
இன்றும் எம் மனதில்.........

பெற்றோர், நண்பர்கள்.

(எ 1554)

## 45-ம் நாள்
# நினைவஞ்சலி



### கப்டன் ரகுபரன்
[அமுதலிங்கம் யோகராசா - தொண்டைமானாறு]

வீர ஜெனனம்: 08-05-1968 — வீர மரணம்: 24-07-1991

சூரிய கத்தியின் விழிம்பில் நடப்பது போன்ற
சீரிய பொறுப்பின் தலைமையை ஏற்றவன்
காரியம் புரிகையில் காவிய மானவன்
நேரிய தலைவன் வழியினில் நடந்தவன்
மாவீர வித்தான ரகுபரன் உனர்கொள்கை
மாறாமல் நாம் இங்கு போரிட்டு
மலர்விப்போம் தமிழீழம் — உன்
செங்குருதி தொட்டு எம்
நெற்றியிலே திலகமிட்டோம்
உறுதியிது! உறுதியிது!!

06-09-1991 வெள்ளிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளில் உற்றார், உறவினர்கள், போராளிகள், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அழைக்கின்றோம்.

உனது பிரிவால் துயர் தாங்காத:

அரசடி.
தொண்டைமானாறு,
06-09-1991.

தந்தை, தாயார்,
சகோதரங்களும்,
நண்பர்களும்.

[சி-5265]

## மணலாறு மோதலில் வீர மரணமடைந்த புலிகள்

[யாழ்ப்பாணம்]

மணலாறு மாவட்டத்தில் நடைபெற்று வரும் நேரடி மோதல்களில் கடந்த முதலாம் திகதி வீரமரண மடைந்த வீரவேங்கைகளின் விபரம்:

குரு [வைத்திலிங்கம் வசீகரன் - குப்பிளான்], விஸ்வம் வீரசிங்கம் சிவராஜ் - கோண்டாவில்] சுவாங்கர் (கனகசபை சுமித்திரன் சிறுப்பிட்டி) இவ் வீரவேங்கைகளின் புகழுடம்புகள் நேற்று மக்கள் அஞ்சலிக்காக சிறுப்பிட்டி ச. ச. நிலையத்தில் வைக்கப்பட்டு பின்பு அஞ்சலிக் கூட்டமும் நடைபெற்றது. இதைத் தொடர்ந்து வீரவேங்கைகளின் புகழுடம்புகள் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு கோப்பாய் மாவீரர் மயானத்திலுள்ள புனித இல்லத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

மேற்படி பகுதியில் 2-ம் திகதி நடைபெற்ற நேரடி மோதலில் சுமித்திரா தர்சினி நடராசா - கிளிநொச்சி] 3-ம் திகதி நடைபெற்ற நேரடிமோதலில் ஜேம்ஸ் மட்டுநகர் வீரமரணமடைந்தார்கள் இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவிக்கின்றனர்.

(வி)

## நீலகிரிக் காட்டில் புலி வேட்டையாம்

(சென்னை)

நீலகிரி மாவட்டத்தில் மாகாணகுடி, கோதாகிரிகாடுகளில் கோயம்புத்தூர் பொலிசார் விடுதலைப்புலிகள் இருக்கிறார்களா என்று தேடிவருகிறார்கள்.

இரகசிய தகவல் கிடைத்ததைத் தொடர்ந்தே இத்தேடுதல் வேட்டை இடம்பெற்றது.

இப்பிரதேசத்தில் இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய இலங்கைத் தோட்டத் தொழிலாளர்கள் குடியமர்த்தப்பட்டு வாழ்ந்து வருகிறார்கள். இவர்களிடையேயும் இத்தேடுதல் நடவடிக்கையால் பீதி நிலவுகிறது.

## ஓராண்டு நினைவஞ்சலி



### செல்லப்பா குலேந்திரன் (பாபு)

[வண்ணை வைத்தீஸ்வரா உயர்தர வகுப்பு மாணவன், சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் மாணவ தொண்டர்]

தோற்றம்: 25-6-1971 மறைவு: 27-08-1990

திதி: 05-09-1991

பன்னிரு மாதங்கள் பறந்து மறைந்தாலும்
நின்னதன் பிரிவுதான் நீங்குமோ நெஞ்சைவிட்டு
கண்களில் நீர்கரைந்து கங்கையெனப் பாய
எங்களை விட்டுஏன் இங்கிருந்து மறைந்தாய்

தந்தையொடு தாய் சகோதரர் உறவினர்கள்
இங்கிருந்து எந்நாளும் நின்நினைவால் ஏங்கியழ
எங்குதான் சென்றாயோ எமதினிய பாபுவே - பல
திங்களது போனாலும் மங்குமோ நின்நினைவு

நெஞ்சமதில் நேர்மையும் நேசமொடு பாசமும்
மிஞ்சுகின்ற உன்தன் மேன்மைகளை மறப்போமா
துஞ்சுகின்றோமையா; நின்பிரிவுத் துயர்தாங்க முடியாது
பிஞ்சினிலே உமைப்பிரிந்து பேதலித்து நிற்கிறோமே

ஆண்டுகள் பலவாக நீண்டுகொண்டே போகலாம்
மீண்டும்நீ வருவாயென விழியோரச் கனவுகள்
தூண்டிடவே நின்வரவதைத் தூரத்தே நோக்குகிறோம்
வேண்டுமோ இக்கெதி விதியதன் சதியிதுவோ

ஆண்டவன் கமலப்பாதம் அடைந்திட்ட அன்புருவே
மாண்டவர் இம்மண்மீது மீண்டும் வருவதில்லை-என
மனதார நினைத்தாலும் மாறாத சோகம் தான்
வேண்டுகிறோம் நின்ஆத்ம சாந்திக்காய் ஆண்டவனை

அன்னாரின் ஆத்மா சாந்திக்காக பிரார்த்திக்கும்
பெற்றோர், சகோதர சகோதரிகள்,
உற்றார், உறவினர்கள்.

243, காரைநகர் வீதி
நாவாந்துறை,
யாழ்ப்பாணம்.

[சி 5267]

## தட்டுப்பாடு

(பண்டத்தரிப்பு)

வலிகாமம் மேற்குப் பகுதியில் காலபோக நெல் விதைப்புக்குத் தேவையான தரமான விதை நெல்லுக்குப் பலத்த தட்டுப்பாடு நிலவுகின்றது.

[72]

## போட்டி

(பருத்தித்துறை)

யாழ். மறைக்கல்வி நிலையம் வேதாகம அறிவை விருத்தி செய்யும் நோக்கமாக 20 வயதிற்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு பேச்சு, கட்டுரைப் போட்டிகளை நடாத்தவுள்ளது.

## பிரார்த்தனை கூட்டம்

[யாழ்ப்பாணம்]

சுவாமி சிவானந்த மஹராஜின் ஜயந்தி தினத்தை முன்னிட்டு செப்டம்பர் 8-ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் பிரார்த்தனைக் கூட்டம் நடைபெறவுள்ளது

## இராசி பலன்

05 09 1991
வியாழக்கிழமை
தமிழுக்கு ஆவணி 20

துவாதசி மு. இ. 11-15 வரை; புனர்பூசம் காலை 7-49 வரை; அமிர்தயோகம் இராகு காலம் நண்பகல் 1-34 முதல் 3-04 வரை; சுபநேரம் காலை 7-04 முதல் 9-04 வரை.

மேடம்: தெளிவான நோக்கு. தொழில் மேன்மை. குடும்ப வசதி.

இடபம்: வரட்டுப்பிடிவாதம், அமைதியின்மை. ஏமாற்றம்.

மிதுனம்; சுயமதிப்பு காரிய வெற்றி குடும்பசுகம்.

கடகம்: தகராறு, மகிழ்ச்சியற்ற சூழ்நிலை, அடக்கம்.

சிங்கம்: வீண் ஜம்பம், கட்டுப்பாடு, பணபலம்.

கன்னி: அறிவாற்றல், வளைந்து கொடுத்தல், தன்னம்பிக்கை.

துலாம்: வீண்சுமை, அற்பர் நேசம், சஞ்சலம்.

விருச்சிகம்: சபலங்கள், கடும் போக்கு, வேற்றுமை.

தனுசு: ஏற்றத்தாழ்வு, ஆன்மீகச் சிந்தனை, தொழில் பாராட்டு.

மகரம்: மகிழ்ச்சியான செய்தி. வாக்குவன்மை, பயணம்.

கும்பம்: தனிமையடைதல், குடும்பப் பிரிவு, கருத்து மோதல்.

மீனம்: மனத் தளர்ச்சி, எதிர்பாராத கவலை, பயம்.

- ஜோஸ்யர்

## பயணிகள் அவதி

[ஊர்காவற்றுறை]

தீவகத்துக்குச் செல்லும் பயணிகள் பண்ணைத் தாம்போதியில் இரும்புக்கேடரால் அமைக்கப்பட்ட ஒடுக்கமான ஒற்றை வழிப் பாதையால் செல்லுவதால் மிகவும் சிரமத்துக்குள்ளாகி வருகின்றனர்

(59)

## நெடுந்தூர ஓட்டப்போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். வைத்தீஸ்வரா வித்தியாலயத்தின் பவளவிழாவை முன்னிட்டு யாழ்ப்பாணக் கோட்டப்பாடசாலை மாணவர்களுக்கிடையே நெடுந்தூர ஓட்டப்போட்டி ஒன்று எதிர்வரும் 11 ம் திகதி காலை நடைபெறவுள்ளது.


## கிறிஸ்தவ இறையியல் கல்லூரி

சுன்னாகம்.

கிறிஸ்தவ இறையியல் பட்டதாரி 'டிப்ளோமா' வகுப்புகளில் சேர்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

குறைந்த பட்சம் G C. E. (O/L)ல் ஆறு பாடங்களில் சித்தி அடைந்தவர்கள் இப்பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம். குறிப்பாக G C. E (A/L) பரீட்சையில் 'கிறிஸ்தவம்' ஒரு பாடமாக எடுத்து சித்தியடைந்தவர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படும்.

இறையியல் கல்லூரியின் விண்ணப்பப் பத்திரத்திலேயே உங்கள் விண்ணப்பம் அனுப்பப்படவேண்டும் இப்பத்திரங்களையும், மற்றும் விபரங்களையும் கல்லூரி அலுவலகத்தில் கேட்டுப்பெற்றுக்கொள்ளவும்.

விண்ணப்பம் இவ் அலுவலகத்தில் செப்ரெம்பர் 29ம் திகதிக்கு முன்பதாக சேரவேண்டும்.

பதிவாளர்

இறையியல் கல்லூரி,
சுன்னாகம்.

[இ-5254]

## தொழிற் பயிற்சிகள்

★ றேடியோ, ரெலிவிசன், வீடியோ டெக் றிப்பியரிங்
சகல இன ரேடியோ, ரெலிவிசன், வீடியோடெக் திருத்தப்படும் முறை ஆரம்பத்தில் இருந்து பயிற்சியளிக்கப்படும்.
காலம்: 5 மாதம்

★ றீவைண்டிங்
மோட்டர், மின்விசிறி, ரான்ஸ்போமர், டைனமோ, பயிற்சியளிக்கப்படும்.
காலம்: 4 மாதம்

★ எலக்றிக்கல் வயறிங்
வீட்டு மின்சார வேலை, மின்சார பொருட்கள் திருத்துதல் பயிற்சியளிக்கப்படும்
காலம்: 3 மாதம்

மீண்டும் வகுப்புகள் ஆரம்பம்:
09-09-1991 (கிழமைநாட்கள்)
14-09-1991 (சனி, ஞாயிறு)

JAFFNA TECHNICAL INSTITUTE

ஸ்ரான்லி வீதி,
(றெயில்வே கடவை அருகாமை)
யாழ்ப்பாணம்.

குறிப்பு:- முன்னர் குறிப்பிட்டதுபோல் T. V. பரீட்சை 06-09-1991 2 மணிக்கு நடைபெறும்.

[எ-1555]

போராட்ட சூழலில் .... உங்கள் உறவினர்களின் வெளிநாட்டு தபால்கள் காலதாமதமாக சென்றடைவதை

DHL தபால் சேவை துரிதப்படுத்துகின்றது !!

பாதுகாப்பாகவும் உரிய இடத்தில் கிடைக்கவும் சகல வெளிநாட்டுத் தபால்களையும் எம்மிடம் ஒப்படையுங்கள்

DHL International

Co, Cosmos Marketing Services,
120, K. K. S. Road, Jaffna.

DHL WORLDWIDE EXPRESS

(அ 1547)

★ கொழும்பு மாநகரில்

# பௌத்த மதத் தலைவர்களை கண்டித்து சுவரொட்டிகள்

(கொழும்பு)

பௌத்த சாசனத்திற்கும், மகாசங்கத்தினருக்கும் அபகீர்த்தியை ஏற்படுத்தும்வகையில் கொழும்பில் பல பகுதிகளிலும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

நேற்றுமுன்தினமிரவு இந்தச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருக்கலாமெனத் தெரிவிக்கப்பட்டது.

கல்கிசை. இரத்மலானை. கட்டுப்பெத்த ஆகிய இடங்களில் ஒட்டப்பட்டிருந்தன.

இந்த சுவரொட்டிகள் மகாநாயக்க, அஸ்கிரிய பீடங்களின் இலங்கைகளுக்குரிய மகாநாயக்கர்கள் மற்றும் அமரபுர ராமஞ்ய நிகாயக்களின் மதத்தலைவர்களை மறைமுகமாக குறிப்பிடும் வகையில் அமைந்திருந்தன

இலங்கையின் வரலாற்றில் முதற்தடவையாக மதத்தலைவர்கள் இவ்வாறான நிலைக்கு ஆளாக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சிவராசன், சுபாவின்

# மண்டை ஓடுகள் படம் எடுக்கப்பட்டன

(பெங்களூர்)

ராஜீவ் கொலை வழக்கில் முக்கியமானவர்களென கருதப்படும் சிவராசன், சுபாவின் சடலங்கள் தகனம் செய்யப்படுமுன் அவற்றின் மண்டை ஓடுகள் எக்ஸ்ரே படம் எடுக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் தகனம் செய்யப்படமுன் அங்கு சென்ற தடவியல் நிபுணர்கள் மேற்கொள்ளும் புலனாய்வுகளுக்காக பயன்படுத்துவதற்காக அந்த உடல்களின் மண்டை ஓடுகளை 'எக்ஸறே' படம் எடுத்துக்கொண்டனர்.

✶ ஹட்டனில்

# ஆயுதங்கள் சகிதம் 9 இளைஞர்கள் கைது

(ஹட்டன்)

ஹட்டனை அடுத்துள்ள வட்டவளைப் பகுதியில் ஆயுதங்களுடன் 9 இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மலையகப்பகுதி நடவடிக்கை தொடர்பாக விசாரணைகள் நடத்திவரும் விசேடபொலிஸ் பிரிவு பல ஆயுதங்களுடன் இவ் 9 இளைஞர்களையும் கைதுசெய்துள்ளனர்.

இவர்கள் 'ஈரோஸ்' இயக்கத்தினராக இருக்கலாமெனவும் பொலிசார் சந்தேகிப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## வான் சாரதி கைது

கொழும்பு)

காத்தான்குடியில் நடைபெற்ற கார்க்குண்டு வெடிப்பில் பயன்படுத்தப்பட்டதாகக் கருதப்படும் வான் சாரதி நேற்று பொலிசாரால் கைது செய்யப்பட்டார். (க)

## சர்வஜன வாக்கெடுப்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்; பெரும்பாலான அங்கத்தவர்களின் ஆதரவு தமக்கு இருப்பதாக கூறிக்கொண்டாலும் அவரது அரசாங்கம் நாடாளுமன்றத்தில் ஒரு சிறுபான்மை அரசாங்கமாக வீழ்ச்சியடைந்து விட்டது

ஜனாதிபதிக்கு எதிரான குற்றச்சாட்டு மனுவைத்தாக்கல் செய்தவர்கள் மனுமீது இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டுமென்று வலியுறுத்திவருகின்றனர் என்றார்

நாடாளுமன்றத்தைசந்திக்க ஜனாதிபதி பயப்படுகிறார். இதற்கு பயந்தே அவர் நாடாளுமன்ற கூட்டத்தை ஒத்திவைத்தார்

ஜனாதிபதி பிரேமா மீதான கண்டனதீர்மானத்தை செயலற்றதாக்கும் வகையில் 116 ஐ. தே. கட்சி உறுப்பினர்களின் கைஒப்பம் பெறப்பட்டு சபாநாயகரிடம் மனுகையளிக்கப்பட்டாலும் கூடகண்டன தீர்மானம் சபையில் சமர்ப்பிக்கப்படுவதை சபாநாயகரால் தடுத்து நிறுத்தமுடியாது.

ஈ. பி. ஆர் எல் எவ், மக்கள் ஐக்கிய முன்னணி, ஐக்கிய சோஷலிஸ முன்னணி, நவசமசமாஜக் கட்சி ஆகியவற்றின் தலைவர்களும் இந்த பத்திரிகையாளர் மாநாட்டில் கலந்து கொண்டனர்.

## சடலத்தில் குண்டு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

படையினர் சென்றனர்.

அங்கிருந்த தமிழர் ஒருவரின் சடலத்தை அகற்ற இவர்கள் முயன்றபோது சடலத்திலிருந்த குண்டு வெடித்ததில் 2 கமாண்டோக்கள் ஸ்தலத்திலே பலியானார்கள். இருவர் படுகாயமடைந்தனர். [சி-153]

## சமரசம்செய்ய

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

அடுத்த சில தினங்களில் இச் சமரச முயற்சிக்கு நல்ல பலன் கிடைக்குமென தாங்கள நம்புவதாக இம் முயற்சியில் ஈடுபட்டுள்ளவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த சமரச முயற்சிக்கு ஜனாதிபதி திரு பிரேமதாஸாவின் நல்ல ஒத்துழைப்பும் இருப்பதாக கூறப்படுகிறது.

## புலிகளின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நெருங்கிய சம்பந்தமுண்டு என்பது சந்தேகத்திற்கிடமின்றி நிருபணமாகியுள்ளது.

ராஜீவை கொலைசெய்யுமாறு புலிகள் தலைவர் திரு வே. பிரபாகரனே உத்தரவிட்டார் என்பதும் இக்கொலையில் விடுதலைப்புலிகளுக்குச் சம்பந்தமில்லையென திரு. பிரபாகரன் கூறிவருவது குறித்து குறிப்பிட்ட அவர் திரு பிரபாகரனை இந்தியாவுக்குக் கொண்டுவந்து விசாரணை நடாத்த மத்திய அரசு வாரண்ட் பிறப்பித்திருப்பதே பிரபாகரனின் மேற்படி கூற்றுக்குக் காரணமென்றும் அவர் தெரிவித்தார். (க)

## ஊரடங்கு அமுல்

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு மாவட்டம் முழுவதிலும், கிளிநொச்சி மாவட்டத்தில் பச்சிலைப்பள்ளி கரைச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும், யாழ் மாவட்டத்தில் சாவகச்சேரி மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் நேற்று முன்தினத்திலிருந்து ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## ஓய்வூதிய காசோலை

(மானிப்பாய்)

ஜூலை மாத ஒய்வூதியத்திற்குரிய காசோலைகள் நேற்று 4ந் திகதி யாழ். செயலகத்திலிருந்து அந்தந்த வங்கிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக ஓய்வூதிய திணைக்களப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (71)

## பொது இணக்கத்தை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் ஏ. ஸி. எஸ் ஹமீத் தெரிவித்தார்.

சர்வகட்சி மாநாடு நேற்று முன்தினம் ஜனாதிபதி பிரேமதாசா தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது. இதில் 17 கட்சிகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டார்கள்.

நாளை மீண்டும் இம்மாநாடு கூட்டப்படவுள்ளது. (153)

## காமினி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்க கட்சியின் 116 உறுப்பினரும், இ. தொ. காவின் 3 உறுப்பினர்களும் ஜனாதிபதிக்கு பூரண ஆதரவு தெரிவித்திருப்பதால் தற்போது அரசுக்கு 10 பெரும்பான்மை வாக்குகள் உள்ளன

இ.ச.ர தமிழ் கட்சிகளையும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசையும் சேர்த்தால் இந்தப் பெரும்பான்மை இன்னும் கூடுலாக வரும்

ஆகவே ஜனாதிபதிக்கு எதிரான பிரேரணையை எந்த விதத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் தெரிவித்தார். (பூ)

## நான்காவது

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பீரங்கிப் படகுகளும் கடும் தாக்குதலை மேற்கொண்டுவருகின்றன.

முல்லைத்திவு கடற்பகுதியால் தரையிறக்கப்பட்ட பெருமளவு படையினர் இம்மோதலில் ஈடுபட்டுவருகிறார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது,

வடக்கு - கிழக்கை இராணுவ ரீதியில் பிரிக்க படையினர் அடுத்த நடவடிக்கையை மேற்கொள்வர் என ஆனையிறவு போருக்கு பின் மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ அண்மையில் 'ஏசியா வீக்' சஞ்சிகைக்குப் பேட்டி அளித்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது. (சி)

## ரூபவாஹினி 'பிரேமவாஹினி' ஆகியது

(கொழும்பு)

ரூபவாஹினி தொலைக்காட்சி, அண்மைக் காலத்தில் 'பிரேமவாஹினி'யாக மாறிவிட்டதாக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி கொழும்பு மாவட்ட எம். பி திரு. சி. டி. குணரத்ன தெரிவித்தார்.

எதிர்க்கட்சியினரின் செய்திகள் யாவும் திட்டமிட்டு இருட்டடிப்புச் செய்யப்படுவதாகவும், ஜனாதிபதியின் நிகழ்ச்சிகளையே பல மணி நேரம் காண்பிப்பதாகவும் அவர் குற்றம் சாட்டினார். (153)

## இராணுவத்துக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தம் குறித்து அது முடிவடைந்த பின்பே அதன்விபரங்களை வெளியிட முடியுமென இதற்குப் பொறுப்பான அதிகாரி ஒருவர் கூறியதாக 'ஏ. எப். பி' செய்திஸ்தாபனம் தெரிவித்தது. (சி-153)

## மணலாறு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நடாத்தின.

தொடர்ந்து அப்பகுதிகளில் மூன்றுவது நாளாக இடம்பெற்றுவரும் குண்டுவீச்சுத் தாக்குதல்களினால் பெருமளவு வீடுகள் சேதமுற்றுள்ளன. (51)

## யாழ். நகரில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

னக்கடை ஆகிய இடங்களிலுள்ள ப. நோ. கூ. சங்கக் கிளைகள் இதுவரை உடைக்கப்பட்டு திருடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (வி)

## பிரேமாவை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

முடிவு எடுக்கப்பட்டது.

இக்கூட்டங்கள் எப்பொழுது எங்கு நடைபெறும் என்பது குறித்த தகவல்களை பாதுகாப்பு காரணங்களுக்காக தாம் உடனடியாக வெளியிட விரும்பவில்லை

தகவல்தொடர்புச் சாதனங்களை பிரேமா அரசு அதிகமாகப்பயன்படுத்துவது அவமானத்திற்குரியது. சுவரொட்டி விளம்பரம் மூலம் ஆதரவு தேடுவது சட்டத்திற்கு புறம்பானது. ஜனாதிபதி பிரேமாவுக்கு தகவல் தொடர்பு சாதனங்கள் அளிக்கும் முக்கியத்துவம் எதிர்க்கட்சியினருக்கும் வழங்கப்படுமேயானால் கண்டன கூட்டம் நடத்தவேண்டிய அவசியம் ஏற்படாது.

ஜனாதிபதி பிரேமதாசா கருத்துக்கணிப்பு நடாத்த தாம் தயார் என வெளிப்படையாக கூறிக்கொண்டாலும் அவர் கருத்துக்கணிப்பு நடாத்துவதுசந்தேகம் என்றும் தெரிவித்தார். (க)

## இராணுவம்-புலிகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

க்க முற்பட்டபோது விடுதலைப் புலிகள் அவர்கள் மீது கடும் தாக்குதலை மேற்கொண்டனர். சுமார் ஒரு மணித்தியாலம் நடைபெற்ற மோதலின் பின்பு இராணுவத்தினர் முகாமுக்குள் சென்றனர்.

இம்மோதலில் ஒரு சிப்பாய் இறந்ததுடன் பலர் படுகாயமும் அடைந்துள்ளதாகச் செய்திகள் கூறுகின்றன. (வி)

## தமிழர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மையை அங்கீகரிக்க முதலில் அரசு முன்வரவேண்டும். தற்போது விடுதலைப்புலிகளின் நிலைப்பாட்டை உலகம் நன்கு புரிந்து வைத்துள்ளது.

இப்போதையநிலையில்ராணுவ நடவடிக்கை மூலம் தீர்வு காண முடியாதென்பதை அரசும் நன்கு புரிந்து கொண்டிருக்கும். புலிகளின் பலம் பற்றியும் அவர்களுக்கு தெரிந்திருக்கும். கடந்த 15 மாத போரில் பல ஆயிரக்கணக்கான பொது மக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

விடுதலைப் புலிகள் கடந்த காலங்களில் பல தாக்குதல்களை நடத்தியுள்ளனர். கடந்த மாதம ஆனையிறவு முகாம் மீதும் விடுதலைப்புலிகள் தாக்கியுள்ளனர். இப்போரில் முந்தைய முறையை விட்டு ராணுவத்துடன் நேருக்குநேர் மரபுவழியிலான போரில் ஈடுபட்டனர்.

இதன் மூலம் ராணுவத்துடன் நேருக்கு நேர் போரிட முடியுமென்பதையும் புலப்படுத்தியுள்ளோம். தாம் வெற்றி பெற்றதாக கூறுவது அரசின் பலவீனத்தையே காட்டுகிறது

முன்னர் நாம் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருந்தோம். ஆனால் கொழும்பில் அரசியல் தலைவர்கள் ஒற்றையாட்சி முறையிலான ஆட்சியே இலங்கைக்கு உரியதென விடாப்பிடியாக நிற்பதைக்காணமுடிகிறது.

முன்னர் நாம் ராணுவ ஸ்தாபனமாக இயங்கிய போதும், தற்போது நல்லதொரு அரசியல் ஸ்திரத்தை ஏற்படுத்தி அதில் முன்னேறி வருகிறோம் என்றார்.

காலஞ்சென்ற

டாக்டர் J. P. C. பிலிப்ஸ் J. P.

அவர்களின்

100ம் நாள் நினைவு தினம்

1991 புரட்டாதி 7ம் திகதி சனிக்கிழமை காலை 7-00 மணிக்கு யாழ். சம்பத்திரிசியார் கல்லூரி தேவாலயத்தில் கூட்டுத் திருப்பலியும் அதைத் தொடர்ந்து பழைய மாணவர் சங்கத்தில் அஞ்சலிக் கூட்டமும், ஞாபகார்த்த மலர் வெளியீடும் நடைபெறும்.

பழைய மாணவர்கள், அனுதாபிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

செயலாளர்,
புனித பத்திரிசியார் கல்லூரிப் பழைய மாணவர் சங்கம்,
யாழ்ப்பாணம்.

59. சென். பற்றிக்ஸ் வீதி,
யாழ்ப்பாணம். (ஏ 1559)

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு செப்ரெம்பர் 5-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Regestered as a News Paper at the General Postoffice Sri Lanka under Licence Number B/10336/81.